**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No. 198/2017** **Date : 04/03 /2023**

**PW** 5 ( பாலகிருஷ்ணன் த/பெ.தங்கவேல் (எ) தங்கான்) **குறுக்கு விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்).**

என்னை வங்கி அதிகாரிகள் விசாரித்தனர். காவல் துறையினரும் விசாரித்தனர். நான் வங்கி அதிகாரி என்னை விசாரித்த போது நான் கையொப்பம் ஏதும் இட்டேனா என எனக்கு நினைவில்லை. நான் வங்கியில் வருடாவருடம் கடன் பெறுவேனா என்றால் பெறுவேன். அதை முறையாக திரும்ப செலுத்தவும் செய்வேன். ஆஜர் எதிரி செயலாளராக அந்த சங்கத்தில் பணியாற்றிய போதும் நான் கடன்களை அவ்வப்போது பெற்று அதை திரும்ப செலுத்துவேன். நான் திரும்ப செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என்றால் சரிதான். என்னை வங்கி அதிகாரி விசாரணை செய்த போதும் நான் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதும் இல்லை என்றால் சரிதான். நான் வாங்கிய கடனை திரும்ப செலுத்திவிட்டேன் என்றும் நிலுவைத்தொகை ஏதும் இல்லை எனவும் விசாரணையின் போதும் கூறினேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் அப்படியே கையொப்பம் இட்டு இருந்தால் கூட அதில் என்ன எழுதியிருந்தது

என எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.